பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

23 ] சென்னை—ஞாயிறு, செப்டம்பர் 15, *1946*. [ விலை. அணா. 2

## காங்கிரஸ் மந்திரிசபைகளும் அஹிம்சையும்

திரு. சங்கர்ராவ் தேவ் எழுதுகிறார்:—

“சத்தியாக்கிரகிகள் என்றுசொல்லிக் கொள்ளுபவர்கள் சர்க்கார் மந்திரிகளாக ஆன மறு நிமிஷமே பட்டாளத்தையும் போலீசையும் ஏன் உபயோகிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் என்பது அனேக ஜனங்களுக்குத் தெரிவதில்லை. அஹிம்ஸா தத்துவத்தையும் கொள்கையையும் மீறுவதாகும் என்று எண்ணுகிறார்கள். இந்தமாதிரி பொதுஜனங்கள் எண்ணுவது அறிவுக்கு ஒத்ததாகவே தோன்றுகிறது. காங்கிரஸ் மந்திரிகள், கொள்கை ஒன்று செயல் ஒன்றாக இருப்பதும் அவர்களுடைய எதிரிகளாயிருக்கும் காங்கிரஸ்காரரும் காங்கிரஸ் அல்லாதவரும் அவர்களை எதிர்ப்பதற்காக அந்த முரண்பாட்டை உபயோகித்துக்கொள்ளுவதும் நம்முடைய ஊழியர்களுடைய நிலைமையைக் கஷ்டமாகச் செய்துவருகிறது.

பொதுவாகப் பார்த்தால் காங்கிரஸின் அஹிம்ஸாக் கொள்கை பலவீனர்களுடைய அஹிம்ஸாக் கொள்கையாகவே இருந்து வருகிறது. நமது தேசம் தற்காலம் இருந்துவரும் நிலைமையில் அது அப்படித்தான் இருக்கும். இது தங்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். பலவான்களுடைய அஹிம்ஸையில் விசேஷமான ஆற்றல் இருப்பதாகக் கூறுகிறீர்கள். அதே சமயத்தில் பலவீனர்களை அஹிம்ஸா அனுஷ்டானத்தின் மூலம் பலவான்களாக ஆக்குவதற்காக முயன்று வருகிறீர்கள். அவர்கள் பலவீன முடையவர்களாக இருந்தபோதிலும் சர்க்கார் அதிகாரம் இன்று அவர்கள் கைக்கு வந்திருக்கிறது. போலீசையும் பட்டாளத்தையும் உபயோகிக்காமல் குழப்பங்களை அடக்குவது அவர்களுக்குச் சாத்யமில்லை. அவைகளை உபயோகியாமல் அடக்கமுயன்றால் அவர்கள் வெற்றி பெறமாட்டார்கள் என்பதுமட்டு மில்லை. ஜனங்களுடைய ஒத்துழைப்பையும் பெறமாட்டார்கள்.

சத்தியாக்கிரகியிடம் அவர் வேண்டாமல் அதுவாகவே பெரிய உத்தியோகம் வருமானால் அதை அவர் ஏற்றுக் கொள்ளலாமா என்றும் ஏற்றுக் கொண்டால் அவர் எவ்விதம் அஹிம்ஸா தர்மத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்றும் நான் தங்களிடம் ஒரு சமயம் கேட்டேன். அஹிம்ஸா தர்மத்தைத் தமது மதக் கொள்கையாகச் செய்துகொண்டிருப்பவர்கள் உத்யோகம் ஏற்கக்கூடாது என்பதும் உத்யோகத்தை ஏற்றால் அவர் ஒருநாளும் சந்தோஷமாக இருக்கமாட்டார் என்பதும் என் கொள்கை. ஆனால் அஹிம்ஸையைச் சமயோஜிதக் கொள்கையாக மட்டும் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த விதமான கஷ்டம் இருக்கமுடியாது. காங்கிரஸ்காரர்கள் பலர் பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யத் தாங்களும் அனுமதி அளித்திருக்கிறீர்கள். அஹிம்ஸையில் நம்பிக்கை உள்ளவர்கள் தங்களைப் பொறுத்தமட்டிலாவது குழப்பங்கள் நடக்கும் சமயங்களில் அஹிம்ஸையை அனுஷ்டிக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. மேலும் அஹிம்ஸை மூலமாக பலத்தை அடைந்தபின் ஜனங்களைச் சர்க்கார் ஆட்சிபுரிவது எவ்வளவு குறைவாக இருக்கமுடியுமோ அவ்வளவு குறைவாக இருக்கக்கூடிய இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவதற்காக அந்த பலத்தை எந்த விதமாக உபயோகிக்க வேண்டும்? நாம் விரும்பும் இலட்சியத்தை அதிகக் கஷ்டமில்லாமல் அடையும்படியாக நீங்கள் செய்யாவிட்டால் சத்தியாக்கிரகத்தைப் பரிபூரணமான சக்தியுடைய ஆயுதமாகக் கருதமுடியாது”

என்னுடைய கொள்கைப்படி இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது எளிது. சத்தியம் அஹிம்ஸை என்னும் மொழிகளைக் காங்கிரஸ் அமைப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் சில காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அவைகள் நீக்கப்பட்டாலும் நீக்கப்படாவிட்டாலும் நீக்கப்பட்டதாகவே வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுதுதான் எந்தக் காரியத்தையும் சரியா தப்பா என்று சரியானபடி மதிப்பிட முடியும். உள்நாட்டில் குழப்பம் உண்டாகாமல் அமைதியைக் காப்பாற்றுவதற்காகப் பட்டாளத்தை மட்டுமன்று, போலீசையுங்கூட எதிர்பார்த்து நிற்கும்வரை நாம் பிரிட்டனுக்கோ அல்லது வேறு எந்த அன்னிய தேசத்திற்கோ அடிமைகளாக இருந்து கொண்டுதான் இருப்போம். அதனால் சர்க்கார் அதிகாரம் காங்கிரஸ்காரர் கையிலிருந்தாலும் ஒன்றுதான். காங்கிரஸல்லாதவர் கையிலிருந்தாலும் ஒன்றுதான். காங்கிரஸ்மந்திரி சபைகள் அஹிம்ஸையை அனுஷ்டிப்பதாக வாக்குக் கொடுக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பிறரும் இராணுவத்தின் பாதுகாப்பையும் போலீசின் பாதுகாப்பையும் விரும்புகிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்படி அவர்கள் அந்தப் பாதுகாப்பை விரும்பினால் அது அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கும். அப்பொழுது அஹிம்சையை அனுஷ்டிக்கப் உறுதிகொண்ட மந்திரிகள் பட்டாளத்தையும் போலீசையும் உபயோகிக்க வேண்டி யிருப்பதால் தங்கள் மந்திரி பதவிகளை ராஜீனாமாச் செய்துவிடவேண்டும். இதன்பொருள் யாதெனில் நம்முடைய ஜனங்கள் பரஸ்பரம் அறிந்து கொள்ளக்கூடிய ஞானமில்லாதிருக்கும்வரை அக்கிரமங்கள் நடந்துகொண்டுதான் இருக்கும் என்பதும் நம்மிடத்தில் அஹிம்சையாகிய உண்மையான பலத்தை உண்டாக்கிக்கொள்ள முடியாதென்பதுமே யாகும். இனி இந்த அஹிம்சா பலத்தை எப்படிச் சிருஷ்டித்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி கூறுகிறேன்.

ஆகஸ்ட் 4-ந் தேதி வெளியான ஹரிஜன் பத்திரிகையில் ஆமதாபாத்திலிருந்து வந்த ஒரு கடிதத்திற்குப்

பதில் சொல்லும்பொழுது இந்தக் கேள்விக்குரிய பதிலைச் சொல்லி யிருக்கிறேன். நம்முடைய இதயத்தில் தைரியமும் அன்பும் உடையவர்களாக உயிர் விடுவதற்கு வேண்டிய மனோதைரியத்தை நாம் உண்டாக்கிக் கொள்ளாத வரை பலவான்களுடைய அஹிம்சையை உண்டாக்கிக்கொள்ள முடியாது.

ஒரு இலட்சிய சமூகத்தில் சர்க்கார் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற ஒரு கேள்வி பாக்கி யிருக்கிறது. அதைப்பற்றி இந்த நிமிஷத்தில் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அத்தகைய சமூகத்தை உண்டாக்குவதற்கு வேண்டிய வேலையை நாம் தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் ஜனங்கள் நன்மை அடையக்கூடிய அளவிற்கு அது மெதுவாக உருவாகிவிடும். க்ஷேத்திர கணிதத்தில் கூறப்படும் கோட்டுக்கு அகலம் கிடையாது. ஆனால் இதுவரை யாரும் அத்தகைய கோட்டை வரைந்ததில்லை. ஒரு நாளும் வரையவும் முடியாது. ஆயினும் அத்தகைய லட்சியக்கோட்டை மனத்தில் வைத்துக்கொண்டு தான் நாம் க்ஷேத்திரக் கணிதத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இதேமாதிரிதான் எல்லாவித இலட்சியங்களும்.

சர்க்கார் ஆட்சி இல்லாத இராஜ்ஜியம் எதுவும் உலகத்தில் காணப்படவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். என்றேனும் அத்தகைய இராஜ்ஜியம் உண்டாகுமானால் அது இந்தியாவில்தான் உண்டாகும். ஏனெனில் அத்தகைய இராஜ்ஜியத்தை அமைப்பதற்கான முயற்சி நம்முடைய தேசத்தில் மட்டும்தான் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அளவற்ற மனோதைரியத்தை இன்னும் நாம் அடையாமலிருந்து வருகிறோம். அத்தகைய மனோதைரியத்தை அடையாமல் அந்த இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முடியாது. அந்த மனோதைரியத்தை அடைவதற்கு எப்படி நாம் சிறைவாசத்தைப்பற்றிய பயத்தை அறவே ஒழித்துவிட்டோமோ அதுபோல் மரணத்தைப் பற்றிய பயத்தையும் அறவே ஒழித்துவிட வேண்டியது இன்றியமையாததாகும்.

புது டில்லி, — 6-9-46 — மோ. க. காந்தி.

## கள் ஒழிக

ரெவரண்ட் ஈ. கார்டன் எழுதியுள்ள கீழ்க்கண்ட கடிதம் பூரண மதுவிலக்கைப்பற்றி நம்முடைய சிந்தனையைக் கிளறிவிடுவதா யிருக்கிறது. அந்தக் கடிதம் வருமாறு :—

“நாட்டில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து ஒழிப்பதற்காக மனப்பூர்வமான முயற்சிகள் நடந்துகொண் டிருக்கின்றன. ஆனால் போஷணைதரக்கூடிய பலகாரங்கள் ஐஸ்கிரீம் முதலியவைகளைத் தடுக்கிறார்களே ஏன்? சோடாக்கம்பெனிகளுக்கு சர்க்கரை கொடுக்கத் தடை ஏற்படுத்தி யிருப்பது ஏன்? இதை யெல்லாம் தடைசெய்ய வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் மதுபான விலக்கைப் பேசாமல் இருப்பது ஏன்? பலகாரங்களை விட மதுபானம் கேடு தருவதல்லவா? மதுபானத்தில் பிரியமுள்ளவர்கள் கூட உயிர் வாழ்வதற்குத் தேவையான தான்யங்களையும் சர்க்கரையையும் இந்த மதுவகைகளை உற்பத்தி செய்வதற்காகக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று கூறமாட்டார்கள்.

பீர் சாராயத்தில் போஷணைச் சத்து இருப்பதாக வைத்துக் கொண்டாலும், பலகாரம் செய்வதற்கு வேண்டிய பார்லி அரிசியிலுள்ள சத்தெல்லாம் பீர் சாராயத்தில் காணப்படும் என்று கூறமுடியுமா?

அமரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதி, அங்குள்ள சாராய உற்பத்திச் சாலைகளுக்குக் கொடுத்துவரும் கோதுமையின் அளவை அதிகமாகக் குறைத்துவிடும்படி உத்திரவிட்டிருக்கிறார். நம்முடைய நாட்டில் உண்டாகும் தான்யத்தையோ அல்லது அயல் நாட்டிலிருந்து இறக்குமதி யாகும் தான்யத்தையோ மதுவகைகள் செய்ய உபயோகிப்பதில்லை என்று பகிரங்கமாக அறிக்கை வெளியிடாம லிருக்கும்பொழுது நாம் நம்முடைய ஏழைகளைப் பட்டினியிலிருந்து காப்பாற்றுவதற்காகத் தான்யங்களை அனுப்பும்படி அமரிக்காவுக்கு வேண்டுகோள் செய்து கொள்வது எப்படி?

சென்னை மந்திரிசபை கூடிய சீக்கிரத்தில் பூரண மதுவிலக்கை ஏற்படுத்த விரும்புவதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். மதுவிலக்கு விரோதிகள் அமரிக்காவில் மதுவிலக்கு வெற்றி பெறவில்லை என்று எவ்வளவுதான் கூறியபோதிலும், அவர்கள் விஷயத்தைச் சரியாக ஆராய்ந்து பார்ப்பார்களானால் அங்கே மதுபானம் முன்னிருந்ததைவிட இப்பொழுது அதிகமாய் விட்டது என்பதையும் வருஷா வருஷம் மதுவகை உற்பத்தி அதிகமாய்க் கொண்டு வருகிறது என்பதையும் கண்டு கொள்வார்கள். இந்தியாவானது பரிபூரண மதுவிலக்கை ஏற்படுத்தாமல் அடையக்கூடிய முன்னேற்றத்தைவிட அதிகமான முன்னேற்றத்தை பரிபூரண மதுவிலக்கை ஏற்படுத்தி அடைய முடியும் என்று நாங்கள் மனதார நம்புகின்றோம். மனப்பூர்வமாகவும் மனோதைரியத்துடனும் இடைவிடாமல் நடத்திவந்தால் இந்தியாவானது சகல நாடுகளும் மதுபானத்தால் எவ்வளவு தூரம் இழிவான நிலைமையை அடைந்து வருகிறது என்பதை நிதர்சனமாகக் காட்டிவிட முடியும்”

இந்தப் பாதிரியார் கூறுவது முற்றிலும் சரியே. பரிபூரண மதுவிலக்கு விஷயத்தில் உலகத்துக்குத் தலைமைவகித்து வழி காட்டுவதற்கு வேண்டிய சக்தியும் சந்தர்ப்பமும் இந்தியாவுக்கு உண்டு. இந்தக் கேவலமான வியாபாரத்தால் கிடைக்கும் வருமானத்தை இழக்கத் தயாரா? தேசம் உயிருடனிருக்க வேண்டுமானால் இழக்கத் தயாராக இருக்க வேண்டியதேயாகும். தென் ஆப்பிரிக்காவில் முதன் முதலாகச் சத்தியாக்கிரகம் நடத்திய காலத்தில் ஏற்பட்ட வீரர்களில் ஒருவரான கச்சேலியாவின் குமாரர் எனக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். அதை வாசிக்க எனக்கு மிகுந்த மனவேதனையாக இருக்கிறது. அங்கே முன் பின் யோசனையின்றி நடைபெற்ற கிளர்ச்சியின் பயனாக அங்குள்ள இந்திய மக்களுக்கு மதுபானம் செய்வதற்குரிய சுதந்திரம் கிடைத்திருக்கிறதாம். அது அவர்களுடைய ஒழுக்கத்தைச் சீர்குலைத்து வருகிறது. இந்த விஷத்தன்மைவாய்ந்த இந்தச் சுதந்திரம் எத்தன்மையுடையது என்பதை நான் அறிவேன். இந்தப் பிரச்னை சம்பந்தப்பட்ட மட்டில் நம்முடைய நாட்டில் மதுபான உற்பத்தியாளர் தவிர வேறு யாரிடத்திலும் அபிப்பிராய பேதம் கிடையாது.

ஏழை மக்களைக் குடித்து நாசமாகும்படி செய்து பெறும் வரிப்பணம் நஷ்டமாவதை மதுவிலக்கால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு ஈடு செய்து விடலாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அத்துடன் கலால் வருமானம் போய்விட்டால் சேனைக்கு வேண்டிய பணத்துக்கு எங்கே போவது என்று கேட்கும் வாதத்துக்கு இனி இடங் கிடையாது. சேனைக்கு இனிமேல் முன் போல் அதிகமான பணம் தேவைப்படாது. ஆகலால் கலால் வருமானத்தை எவ்வித தயக்கமோ தாமதமோ இல்லாமல் தியாகம் செய்துவிட வேண்டும். வருமானம் நஷ்டமாய் விடுமே என்ற எண்ணம் வந்து இந்த அவசியமான சீர்திருத்தத்தின் முன்னேற்றத்திற்குத் தடை செய்யும்படி விடக்கூடாது.

காங்கிரசும் முஸ்லிம் லீகும் ஒன்று சேர்ந்தாலும் சேராவிட்டாலும் காங்கிரஸ் மந்திரி சபைகள் இந்த நல்ல கைங்கரியத்தைத் துணிவுடன் செய்யவேண்டும். மதுபானத்தை விலக்கும் சமயத்திலேயே அதற்குப் பதிலாக உபயோகிக்க வேண்டிய பானங்களைக் கொடுக்கவும் வேண்டும். அதனுல் மதுபானம் செய்து வந்தவர்களுக்கு ஆரோக்கியமும் கிடைக்கும், தவறில்லாத முறையில் சந்தோஷமான பொழுது போக்கும் கிடைக்கும்.

புது டில்லி — 7-9-46 — மோ. க. காந்தி.

## ஹரிஜனங்களும் கிணறுகளும்

திரு. ஹரிதேவ் ஸாகே எழுதுகிருர்:—

"தாங்கள் நேற்று (4-9-46) மாலை நடந்தபிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியபொழுது, பொதுக் கிணறுகளிலிருந்து ஜலம் எடுக்க முடியாதபடி ஹரிஜனங்கள் கஷ்டப்படுவதைக் குறித்துக் கூறினீர்கள். அவர்களுக்காக 25 வருஷகாலம் இடைவிடாது உழைத்து வந்துங்கூட, நாம் இன்னும் அந்தத் தடையை நீக்குவதில் வெற்றி பெருமல் இருந்து வருகிறோம். அவர்களுடைய துன்பங்கள் தங்களுக்குத் தெரிந்திருப்பது போல வேறு யார்க்கும் தெரியாது.

இப்பொழுது காங்கிரஸ் சர்க்கார்கள் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் ஹரிஜனங்கள் விஷயமாகத் தாங்கள் மேற்கொண்டுள்ள கொள்கையைப் பற்றி உடனே வெளியிடவேண்டும் என்றும் சட்டத்தின் மூலம் நீக்கக்கூடிய குறைகளையெல்லாம் நீக்கவேண்டும் என்றும் நான் தாழ்மையாகக் கூறிக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பஞ்சாபில் காணப்படும் நிலைமையைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே ஹரிஜனங்கள் பொதுச் கிணறுகளிலிருந்து ஜலம் எடுக்க முடியாது என்பது மட்டுமன்று, தாங்களாகத் தங்களுக்குக் கிணறு தோண்டிக் கொள்ளவும் அனுமதி கிடையாது. பஞ்சாப் சர்க்கார் அவர்களுக்குச் சர்க்கார் செலவில் கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், அது சாத்தியப் படாவிட்டால் கிணறு தோண்டிக்கொள்வதற்காக நிலத்தைக் கொடுக்கவும் வேண்டும் என்று தாங்கள் பஞ்சாப் சர்க்காரை வேண்டிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஹரிஜனங்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்யத் தயாராக இருந்தால் கூட அவர்களுக்கு வேண்டிய நிலத்தைக் கொடுக்கக்கூட இல்லாத பல கிராமங்கள் இருந்து வருகின்றன.

சில யிடங்களில் சர்க்கார் ஹரிஜனங்களுக்குக் கிணறுகள் வெட்டித்தர ஆரம்பித்திருக்கிருர்கள். ஆனுல் அவை கொஞ்சங்கூட போதுமானதாக இல்லை. ஜனங்களுக்கு வேண்டிய குடிஜலத்தைப் போதுமான அளவு கிடைக்கும்படி செய்வது சர்க்காருடைய கடமை என்பதில் சந்தேகம் கிடையாது'

நிருபர் கூறுவது முற்றிலும் சரியே. ஹரிஜனங்களுக்குக் கிணறுகள் வெட்டிக் கொடுப்பது சர்க்காருடைய கடமையேயாகும். கிணறு வெட்ட நிலம் கொடுத்தால் மட்டும் போதாது, கிணற்றை வெட்டிக் கொடுக்கவும் வேண்டும்.

புது டில்லி — 6-9-46 — மோ. க. காந்தி

## கதர்

இப்போது நாட்டில் காணப்படும் குழப்ப நிலைமையில் கதரைப்பற்றிப் பேசுவது அர்த்தமற்றது என்று கூறக்கூடும். கதர் பக்தர்கள் பலர் நகரங்களில் வசிப்பதும். கடவுள் அருளால் குழப்பமெல்லாம் நகரங்களிலேயே உண்டாவதும் உண்மைதான். ஆனுல் நகரவாசிகள் எல்லோரும் இந்த முட்டாள்தனமான கலகங்களில் கலந்து கொள்வதில்லை. உண்மையான கதர் பக்தர்கள் எப்பொழுதும் சமாதானப் பிரியர்களாகவே இருக்க வேண்டும். நாம் கதரைப் பாமர மக்களிடம் பரப்ப முடியாமற் போனுல் அஹிம்சா முறையில் சுயராஜ்யம் ஸ்தாபிப்பது என்னும் கனவை அடியோடு விட்டுவிட வேண்டியது தான். ஆனுல் சமாதான வாழ்வில் நம்பிக்கையுடையவர்கள் எப்போதும், தங்களைச் சுற்றி வகுப்புவாதச் சூருவளி எவ்வளவு பிரமாதமாக அடித்தாலும் கைராட்டினத்தையும் கதரையும் மறந்துவிடலாகாது. இவர்கள் உணவை மறந்தாலும் மறக்கலாம், கைராட்டினத்தை மட்டும் மறக்கவே கூடாது.

அதனுல் சர்க்கா சங்கத்தார் செய்துகொள்ளும் கீழ்க்கண்ட வேண்டுகோள் முற்றிலும் சரியானதேயாகும். இத்தகைய வேண்டுகோளை இதர கதர் ஸ்தாபனங்களும் விடுத்திருக்கின்றன. கதரை விரும்புகிறவர்கள் அகில இந்திய சர்க்கா சங்கம் நிறைவேற்றியுள்ள கீழ்க்கண்ட தீர்மானப்படி நடந்து கொள்ள வேண்டும் :—

(1) சகல கதர் கடைகளும் கதர் பக்தர்களும் சமீபத்தில் வரவிருக்கும் 78-வது கதர் ஜயந்திக் கொண்டாட்டத்துக்காக 78 ஆயிரம் சாதாரண கதர் பக்தர்களைச் சேர்க்க வேண்டும் என்றும் அவர்களில் பாதிப்பேரேனும் தம்முடைய தேவைக்குவேண்டிய நூலைத் தாமே நூற்பவராக இருக்க வேண்டும் என்றும் சர்க்கா சங்கத்தின் தர்மகர்த்தர்கள் வேண்டிக் கொள்கிருர்கள்.

(2) சாதாரண கதர் பக்தர் யாரெனில் வழக்கமாகக் கதர் அணிபவரும் சர்க்கா சங்கத்துக்கு ஆண்டுதோறும் 6 சிட்டம் நூல் நன்கொடையாக அளிப்பவருமாவார்.

(3) தம் தேவையைப் பூர்த்தி செய்துகொள்பவர் யாரெனில் நோயாலோ தவிர்க்க முடியாத வேறு காரணங்களாலோ முடியாமலிருக்கும் சமயங்களில் தவிர இதர சமயங்களில் தாமோ தம்முடைய குடும்பத்தாரோ நூல் நூற்று மாதந்தோறும் ஏழரைச் சிட்ட நூல் தயாரிப்பவரும் தாமே பஞ்சரைத்து வெட்டி நூற்பவரானுல் 5 சிட்ட நூல் தயாரிப்பவரும் ஆவார்.

(3) கதர் உற்பத்தி செய்யும் ஊர்களில் எல்லாம் ஆளுக்கு ஒரு சதுரகஜம் கதராவது எல்லா ஜனங்களும் உபயோகிக்கும்படி செய்ய வேண்டும் என்றும் சர்க்கா சங்கத்தார் தீர்மானித்திருக்கிருர்கள். இந்தக் குறைந்த அளவு காரியமாவது செய்து தீர வேண்டும.

புதுடில்லி, —4.9.46— மோ. க. காந்தி.

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவருமல் கிடைக்க வேண்டுமானுல் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0

தமிழ் ஹரிஜன்,

தியாகராயநகர் :: சென்னை.

# தமிழ் ஹரிஜன்

செப்டம்பர் 15 ஞாயிறு 1946


## என்ன செய்ய வேண்டும்?

ஒரு நண்பர் கீழ்கண்ட கேள்விகளை அனுப்பியிருக்கிறார்:—

கேள்வி:—போக்கிரிகள் தாக்கினாலும்கூட அஹிம்ஸா தர்மத்திலிருந்து அணுவளவும் பிறழக் கூடாதென்று நீங்கள் எப்பொழுதுமே சொல்லி வருகிறீர்கள். பெண்களைத் தாக்கினாலும் கெடுக்க வந்தாலும் அப்படியே தான் நடந்து கொள்ள வேண்டுமா? அஹிம்ஸா விஷயத்தில் தங்கள் யோசனைப்படி நடக்க முடியாதவர்களைக் கோழைகளைப் போல் சாக வேண்டுமென்று சொல்லுவீர்களா? அல்லது அக்கிரமிகளை பலாத்காரமாக எதிர்க்க வேண்டுமென்று சொல்லுவீர்களா?

பதில்:—நான் அமைக்க விரும்பும் சமூகத்தில் அத்தகைய அக்ரமங்கள் எதுவும் நடக்க முடியாது. ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் அத்தகைய அக்ரமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் சந்தேகத்திற்கு இடமில்லாமல் கூறும் பதில் இது: அஹிம்சையை அனுஷ்டிக்க விரும்புகிறவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்திலும் பிறரைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்திலும் கோபமும் பழிவாங்கும் எண்ணமும் இல்லாமலே சாகத் தயாராக இருக்க வேண்டும். இது தான் வீரத்தின் சிகரம். ஒரு தனி நபரோ ஒரு கூட்டத்தாரோ இந்த மகாப் பெரிய தர்மத்தை அனுஷ்டிக்கச் சக்தி யில்லாமலோ, பிரிய மில்லாமலோ இருந்தால் உயிரைக் கொடுத்தேனும் எதிர்ப்பது அவசியம். இது முதல் தரமான வழியாக இல்லாவிட்டாலும் இரண்டாம் தரமான வழியாகும். கோழைத்தனம் வெறும் ஆண்மையின்மையாகும். அது பலாத்காரத்தைவிடப் பன்மடங்கு கெட்டதாகும். கோழை பழிவாங்க விரும்புகிறான். ஆனால் தான் சாகப் பயந்து போய் தன்னைப் பாதுகாக்கும்படி பிறரைக் கேட்டுக் கொள்ளுகிறான். கோழை மனிதனைவிடக் குறைந்தவன். அவன் ஆணும் பெண்ணும் உள்ள சமூகத்தில் இருக்கத் தகாதவன். பெண்கள் என் புத்திமதிப்படி நடந்தால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் சகோதர சகோதரிகளுடைய உதவியை எதிர் பார்க்க வேண்டியதில்லை.

கேள்வி:—முஸ்லீம் லீக் தலைவர்கள் ஒரு பக்கம் பகிரங்கமாக பலாத்காரத்தைப் போதித்துக் கொண்டும், ஹிந்துக்களை எதிர்த்துப் போர்புரியத் தூண்டிக் கொண்டுமிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் அவர்கள் போலீஸ் கோர்ட் முதலிய சகல நிர்வாக அதிகாரங்களையும் வகிக்கும் மந்திரிகளாகவும் இருந்து வருகிறார்கள். இவ்விதம் முஸ்லீம் லீக் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு வித காரியங்கள் செய்து வருவதை நீங்கள் சந்தேகத்திற்கு இடமின்றிக் கண்டிக்க வேண்டாமா?

பதில்:— இப்படி இரண்டு விதமாக அவர்கள் நடந்து வருவது முற்றிலும் தவறானதே. அது நம்முடைய தேசிய வாழ்வில் ஒரு துக்ககரமான அத்யாயமாகும். நான் கண்டிப்பது எல்லோருக்கும் பொருந்தும். அது நிரம்பத் தீயதாக இருப்பதால் அதிக நாளைக்கு நடந்து கொண்டிருக்க முடியாது.

கேள்வி:—சரித்திரத்திலெங்கும் காணப்படாத இந்தப் பெரிய அக்ரமத்தைத் தடுக்க இந்தியாவில் சர்க்கார் எதுவும் இல்லையா?

பதில்:—சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்கார் தான். நாம் அவர்கள் கையில் வைத்து ஆட்டும் பொம்மைகள். ஆயினும் அந்தச் சர்க்காரைக் குறை கூறுவது தவறானதும் முட்டாள்தனமானதுமாகும். அந்த சர்க்கார் அதன் இயல்புக்கு ஒத்தவண்ணம் நடந்து வருகிறது. அது நம்மைப் பொம்மைகளாக இருக்கும்படி கட்டாயப்படுத்த வில்லை. நாம் தான் இஷ்டப்பட்டு அவர்களிடம் போய்க் கொண்டிருக்கிறோம். ஆதலால் நாம் ஒவ்வொருவரும் அவர்கள் இஷ்டம் போல் நடக்க மாட்டோமென்று மறுத்துவிட முடியும்.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவைவிட்டு வெளியேறச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பகிரங்கமாக ஒத்துக் கொள்ள வேண்டும். எப்படி வெளியேறுவது என்று அதற்குத் தெரியவில்லை. அது இந்தியாவை விட்டுப் போய்விட வேண்டுமென்று உண்மையாகவே விரும்புகிறது. அத்துடன் அது இந்தியாவை விட்டுப் போகு முன் இந்தியாவிற்குச் செய்த தீங்கைப் போக்கி விட வேண்டுமென்றும் விரும்புகிறது. கொழுமுனையில் சிக்கிக் கொண்ட தவளையைப் போலிருப்பதால் அதற்கு எங்கே நோவுகிறதென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சர்க்கார் தாங்கள் செய்த தீங்கைச் சீக்கிரமாகப் போக்க விரும்பினால் அவர்கள் இந்தியாவைத் தன்னுடைய இஷ்டம் போல் நடந்து கொள்ளும்படி விட்டுப் போய் விடுவதே நல்லதென்று அவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தார் இந்தத் தெளிவான விஷயத்தை அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறார்கள். இந்தியாவைப்பற்றி நமக்குத் தெரிந்ததை விடத் தங்களுக்கே அதிமாகத் தெரியுமென்று தங்களுக்குத தாங்களே முகஸ்துதி செய்து கொள்ளுகிறார்கள். அவர்கள் நம்மை நூறு வருஷத்திற்கு அதிகமான காலம் அடிமையாக வைத்திருந்து விட்டபடியால் நம்முடைய தலைவிதியை நிர்ணயிப்பதற்குத் தங்களுக்கே உரிமை உண்டென்று கூறுகிறார்கள். சமாதான வழியில் நம்முடைய பிறப்புரிமையைப் பெற விரும்பினால் நாம் முணுமுணுக்கலாகாது. சத்தியாக்கிரகம் ஒரு நாளும் பழி வாங்காது. அதற்கு அழிப்பதில் நம்பிக்கை கிடையாது. மனத்தை மாற்றுவதில் தான் நம்பிக்கை உண்டு. சத்தியாக்கிரகம் எப்பொழுதேனும் தோற்றதென்றால் அதற்குக் காரணம் அதில் குறைபாடு இருக்கிறதென்பதன்று. சத்தியாக்கிரகி செய்யும் தவறுகளேயாகும். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவைவிட்டு வெளியேறிவிடத்தீர்மானித்து விட்டபடியால் அவர்களிடம் நாளுக்கு நாள் அதிகமான குறைகள் காணப்படும். பிரிட்டிஷ் சர்க்கார் முறிந்து போன கோல் என்பதை இரண்டு கக்ஷியாரும் கண்டு கொள்ளுவார்கள். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சண்டையிடும் போது தங்களைப் பாதுகாக்க பிரிட்டிஷ் சர்க்காரை நம்பி நிற்பதை விட்டு விடாத வரை இந்தியா சுதந்திர மடையாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கேள்வி:—இப்பொழுது நடந்துவரும் காரியங்கள் இப்படியே நடந்துகொண்டு போக விடப்பட்டால் உள்நாட்டுக் கலகம் வந்தே தீரும் என்று எண்ணுகிறீர்களா? அத்தகைய நிலைமை வந்தால் அப்போது உங்கள் தேசத்து மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

பதில்:—இன்னும் உள்நாட்டுக் கலகம் உண்டாகவில்லை. அது ஏற்படப் போவதுபோல் தோன்று

கிறது. இப்பொழுது அது நமக்கு விளையாட்டுப் போலிருக்கிறது. தேசங்கள் போக்கிரித்தனத்தில் இறங்கினால் அதற்குரிய மரியாதையான பெயர் யுத்தம் என்பது. பிரிட்டிஷார் அறிவுடையவர்களாக இருந்தால் அது வராமற் பார்த்துக் கொள்ளுவார்கள். ஆனால் அப்படி நடப்பதுபோல் தோன்றவில்லை. மாகாணச் சட்ட சபைகளிலுள்ள ஆங்கிலேய மெம்பர்கள் கூட 1935-வது வருஷத்து அரசியல் சட்டம் தங்களுக்குச் சட்ட சபையில் ஸ்தானங்கள் அளித்தது, நியாயமானது என்பதற்காக அன்று என்பதையும் பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாக்கவும் ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரித்து வைக்கவும்தான் என்பதையும் உணர்ந்து கொள்ள மறுக்கிறார்கள். இது சிறு விஷயம். ஆயினும் காற்று எந்தப் பக்கமாய் அடிக்கிறதென்பதை அது தெளிவாகக் காட்டுகிறது. சுயராஜ்ய பக்தர்களும் சிருஷ்டி கர்த்தர்களும் இந்தக் கெட்ட சகுனங்களைக் கண்டு அதைரியப் படலாகாது. என்னுடைய யோசனை கடைசிவரை சத்தியாக்கிரக ஆயுதத்தை உபயோகிப்பதுதான். சுதந்திரத்திற்கு வேறு வழி கிடையாது. அதுதான் சிறந்த மார்க்கம். உயிர் தரக்கூடிய சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விரும்புகிறவர்கள் பட்டாளத்தின் உதவியையோ போலீஸ் உதவியையோ நாடாமல் இருக்கக்கூடிய அளவு தங்கள் மனத்தைத் தைரியப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் புஜபலத்தையே நம்பியிருக்கவேண்டும். புஜபலத்தையும் ஆயுதபலத்தையும் நம்பாமல் தங்கள் மனோதைரியத்தை நம்பியிருப்பதே அதைவிட நல்லதாகும்.

புது டில்லி, — 9-9-46 — மோ. க. காந்தி.

## தீண்டாமையும் நீர்க் கக்கூசும்

கேள்வி:—ஆள் எடுக்கும் கக்கூஸ் ஏற்படுத்தாமல் நீர்க் கக்கூஸ் ஏற்படுத்துவது தீண்டாமையை ஒழிப்பதற்கான வழிகளில் ஒன்றென்று நீங்கள் கருதுகிறீர்களா? அப்படியானால் நீங்கள் மெஷின்களை வெறுத்தாலும் இந்தக் கக்கூஸுகளை ஏற்படுத்துவதை எதிர்க்கமாட்டீர்களல்லவா?

பதில் :—போதுமான ஜலம் இருக்க வேண்டும். இந்தக் கக்கூசுகள் ஏற்படுத்துவதால் ஏழைகளுக்கு எவ்விதக் கஷ்டமும் உண்டாகக் கூடாது. அப்படியானால் இந்தக் கக்கூசுகளை ஏற்படுத்துவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

நகரத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யும் சாதனமாக அதை வரவேற்க வேண்டும். ஆனால் இன்று நாம் அதைப் பட்டணங்களிலேயே ஏற்படுத்தக்கூடிய நிலைமையிலிருந்து வருகிறோம். மெஷின்களிடம் எனக்குள்ள வெறுப்பை ஜனங்கள் சரியாக அறிந்துகொள்ளவில்லை. மெஷின்கள் என்பதற்காக எனக்கு மெஷின்களிடம் வெறுப்புக் கிடையாது. வேலையில்லாமல் செய்து சோம்பேறியாக வைத்துவிடும் மெஷின்களுக்குத்தான் நான் விரோதி. நீர்க் கக்கூஸ் தீண்டாமைச் சாபத்தை நீக்கி விடுமா என்பது மிகுந்த சந்தேகத்திற்கிடமான விஷயம். தீண்டாமைச் சாபம் நம்முடைய மனத்தைவிட்டு ஒழிய வேண்டிய விஷயம். அது நீர்க் கக்கூஸ் போன்ற சாதனங்கள் மூலம் மறைந்துவிடாது. நாம் என்று தோட்டிகளாகி கக்கூஸ் சுத்தம் செய்வதை கௌரவமாகக் கருதுகிறோமோ அன்றுதான் தீண்டாமை என்னும் பேயை ஓட்டிவிட முடியும்.

புது டில்லி, — 2-9.46 — மோ. க. காந்தி.

## தேவதாஸி முறை

ஒரு நிருபர் எழுதுகிறார்:—

தாங்கள் ஹரி ஜனங்களைக் கைதூக்கி விடுவதற்காகப் பெரு முயற்சி செய்கிறீர்கள் என்பதும் தங்கள் விலை உயர்ந்த நேரத்தை ஹரிஜனச் சேரியில் செலவழித்து வருகிறீர்களென்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த தேவ தாஸிப் பெண்கள் ஆயிரக் கணக்கானவர்கள் பூனாவிலும் பம்பாயிலும் பகிரங்கமாக விபசாரத் தொழில் நடத்தி வருவதை தங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஏன் அது நடைபெற வேண்டும்? இந்தப் பெண்கள் தாழ்ந்த ஜாதியில் பிறந்து அதன் காரணமாகத் தங்கள் கற்பை இழக்க நேரிட்டதினாலா, இவர்கள் இப்படி வெட்ககரமான விபசாரத் தொழில் நடத்த வேண்டியிருக்கிறது? இது மிகவும் முக்கியமானதும் அவசரமானதுமான பிரச்னை என்று சொன்னால் தவறாகாது. சென்னை சர்க்கார் இந்தியன் பீனல் கோடு சட்டத்தை உபயோகித்து இத்தகைய சட்ட விரோதமான வழக்கத்தை மதுரையிலும் சென்னையிலும் தடுத்திருக்கிறார்கள். அது போல் பம்பாய் மாகாணத்திலும் செய்ய முடியாதா?"

பதில்:—கோவில்களிலுள்ள தேவதாஸிகளைப் பற்றியும் பிற இடங்களிலுள்ள தேவதாஸிகளைப் பற்றியும் நமக்குண்டாகும் வெட்கத்தைக் குறித்து நான் பல முறை எழுதியிருக்கிறேன். விபசாரி என்னும்மொழியைக் காமவிகாரமுள்ள பெண்களுக்கே நாம் சாதாரணமாக உபயோகப்படுத்தி வருகிறோம். ஆனால் அத்தகைய குணமுடைய ஆண்களுக்கும் அந்தப் பதத்தை உபயோகிக்க வேண்டியதாகும். பெண்கள் சாப்பாட்டுக்காகத் தங்கள் சரீரத்தை விற்கிறார்கள். அதனால் பெண் விபசாரிகளைவிட ஆண் விபசாரர்களே அதிகமாகக் கண்டிக்கத்தக்கவர்கள். இந்தத் தீய பழக்கத்தைச் சட்ட விரோதமான காரியமாக செய்ய வேண்டும். சட்டமும் ஓரளவிற்குத்தான் உதவி செய்யும். சட்டமேற்பட்டிருந்தாலும் கூட ஒவ்வொரு தேசத்திலும் இந்தத் தீமை கள்ளத்தனமாக நடந்துகொண்டுவருகிறது. பொதுஜன அபிப்ராயம் தீவிரமாக இருந்தால் அது சட்டத்திற்குத் துணை செய்யும்.

புது டெல்லி —2.9-46— மே. கா. காந்தி.

## பூரண சுதந்திர விழா

இந்திய நண்பர் ஒருவர் எகிப்திலிருந்து எழுதுகிறார்:—

"இந்தியா சீக்கிரத்தில் பூரண சுதந்திரம் அடையப் போவதாகவும் அதை நாடெங்கும் கொண்டாடப் போவதாகவும் நாங்கள் ரேடியோ மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் அறிகின்றோம். இங்குள்ள இந்திய மக்கள் அந்த விழாவில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் உண்மையிலேயே தேசம் பரிபூரணமாக சுதந்திரம் அடைந்து விட்டதென்று தாங்கள் முற்றிலும் திருப்தி அடைந்திருந்தால் தான் நாங்கள் அதில் கலந்து கொள்ளுவோம். தகங்ள் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்."

காந்தியடிகள் எழுதிய பதில் வருமாறு:—

"தங்கள் கடிதம் பெற்றேன். தாங்கள் என் பதிலுக்காகக் காத்திருப்பது சரியே. உண்மையாகவே பரிபூரணமாக சுதந்திர மடைவதற்கு முன்னால் என்ன கொண்டாட்டம் வேண்டியிருக்கிறது? இன்று நாம் கூறக்கூடியதெல்லாம் சுயராஜ்ய வாசல் திறக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டும் தான். ஆனால் இதைக் கொண்டு திருப்திப் படுவது முழு முட்டாள் தனமாகும். இன்று நம்முடைய நகரங்களில் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அயல் நாடு களிலுள்ள இந்திய மக்கள் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் பரிபூரணமான சுதந்திரத்தை அடைவதற்கு வேண்டிய உதவியைச்

செய்யலாம். எகிப்தில் வாழும் நீங்களும் இந்த விதத்தில் உதவி செய்ய முடியும்."

புது டெல்லி — 8-9-46 — மோ. க. காந்தி.

## பலவந்த விவாகம்

ஒரு சகோதரி எழுதுகிறார்:—

பெற்றோர் "நாங்கள் சொல்லும் வரனை மணந்து கொள், இல்லையானால் வீட்டை விட்டு வெளியே போய்விடு" என்று தம்மகளிடம் வற்புறுத்தினால் அவர்கள் கூறும் வரனை மணந்து கொள்ளப் பிரியப்படாத பெண் என்ன செய்யவேண்டும்? தன்னுடைய ஜீவனத்திற்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கு போதுமான அளவு கல்வி பெறாத பெண் என்ன செய்வாள்? யாருடைய பாதுகாவலை நாடுவாள்?"

பதில்:—இந்தக் கேள்வியை வாசிக்கமிகுந்த வருத்தமாக இருக்கிறது. பெற்றோர்கள் இப்படிக் கல்யாணம் செய்யும்படி கட்டாயப் படுத்துவது முற்றிலும் தவறு. ஜீவனத்திற்கு வேண்டிய பணத்தை சம்பாதித்துக் கொள்ளத் தங்கள் பெண்களுக்குக் கற்றுக் கொடாதிருப்பதும் தவறு. கல்யாணம் செய்து கொள்ள மறுப்பதற்காக வீட்டை விட்டு வெளியே விரட்டுவதற்கு எந்தத் தாய்தந்தையருக்கும் உரிமை கிடையாது. இத்தகைய கொடூர மனப்பான்மையுடைய தாய் தந்தையர்கள் குறைவாகவே இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

அந்தப் பெண்ணுக்கு நான் கூறக் கூடிய புத்திமதி யாதெனில் கையால் செய்யக்கூடிய எந்தவேலையையும் கக்கூஸ் எடுப்பதையும் கூடக் கௌரவக் குறைவாகக் கருதக் கூடாது என்பதேயாகும். பெணகள் தங்களைப் பாதுகாக்க ஆண்களை எதிர் பார்த்து நிற்கக் கூடாது. தங்கள் பலத்தையும் ஒழுக்கத்தையும், கடவுளையுமே, பண்டைக் காலத்து திரௌபதி நம்பியிருந்தது போல நம்பியிருக்க வேண்டும்.

புது டில்லி, — 6-9-46 — மோ. க. காந்தி.

## வாரக் கடிதம்

### கல்கத்தா சம்பவம்

காந்தியடிகள் (24-8-46) மாலையில் கடைசியாக ஆசிரமத்தில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் கல்கததாவிலும் பிற இடங்களிலும் நடந்த அக்ரமச் செயல்களைக் குறித்துக் கீழ்கண்டவாறு கூறினார்:—நாம் முதல் முதலாக ஆசிரமத்தை ஏற்படுத்திய பொழுது எந்த இலட்சியங்கள் நமக்கிருந்தனவோ அவையே இப்பொழுதும் இருக்கின்றன. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பில் நாம் செய்யவேண்டிய கடமை யாது? ஜனங்கள் எதிர் பார்ப்பது போல் நாம் நடப்பதற்கு வேண்டிய பலம் நம்மிடமில்லை என்பதைப் பணிவுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் அந்தப் பலத்தை அடைய மனப்பூர்வமாக முயன்று கொண்டிருக்கிறோம். நமக்கு நயமுடைய லட்சியங்களில் பரிபூரணமான நம்பிக்கை இருந்தால் நாம் அந்த நெருப்பில் குதித்திருப்போம். அப்படிச் செய்யும் பரிசுத்தமான பிராணத்தியாகம் அந்த நெருப்பை அணைத்திருக்கும். விட்டில்பூச்சி அறிவில்லாமல் விளக்கில் விழுந்து சாவதைப் பரிசுத்தமான பிராணத்தியாகம் என்று சொல்லக்கூடாது. தியாகம் பலன் தரவேண்டுமானால் உள்ளும் புறமும் பரிசுத்தமுடையவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய தியாகத்தால் அடைய முடியாதது எதுவும் கிடையாது. பரிசுத்தமில்லாவிட்டால் தியாகம் என்பது வெறும் தற்கொலை போன்றதேயாகும். தியாகத்தை மனத்தில் எவ்வித வெறுப்பும் பகைமையும் இல்லாமல் செய்ய வேண்டும். நாம் அந்த இலட்சிய நிலைமையை அடையாவிட்டாலும் நாம் அதை அடைய உண்மையாகவே முயன்று கொண்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. நாம் சிறைக்குச் செல்லும் வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் சிறைக்குச் செல்வதென்பது சத்தியாக்கிரகத்தின் ஆரம்பமேயன்றி முடிவன்று. இந்தியாவின் நியாயமான கோரிக்கையைப் பெறுவதற்காக உயிர் துறப்பதுவே நாம் செய்யும் சத்தியாக்கிரகத்தின் சிகரமாகும். ஆதலால் அத்தகைய சத்தியாக்கிரகத்திற்கு இன்றியமையாத சுத்தத்தையும் அஞ்சாமையையும் அருளும்படியாகக் கடவுளிடம் பிரார்த்திப்போம். அப்பொழுதுதான் நாமிருக்குமிடத்தை ஆசிரமம் என்று கூறிச் கொள்வதத்குத் தகுதியுடையவர்களாவோம்.

### வருங்கால ஆசிரியர்கள்

மூலாதாரக் கல்வி ஆசிரியர்களாகப் பயிற்சி பெறுவதற்காகக் காங்கிரஸ் மந்திரி சபைகள் எழுபத்தாறு பேரையும், கஸ்தூரிபாய் ஞாபகார்த்த நிதிக் கமிட்டியார் முப்பது பேரையும் சேவா கிராமத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு உபதேசம் செய்யுமாறு திரு. அரியநாயகம் காந்தியடிகளைக் கேட்டுக்கொண்டார். அந்த வைபவம் ஆகஸ்டு 23ம் தேதி தாலிமி சங்க மண்டபத்தில் நடந்தது. தம்முடைய கணவர் அரியநாயகத்தைப் போலவே தாமும் மூலாதாரக் கல்வி ஸ்தாபனத்தின் உயிர்நாடியாக இருந்துவரும் திருமதி ஆஷாதேவி அந்த மண்டபத்தை அழகாக அலங்கரித்திருந்தார். அவர் நல்ல ஸம்ஸ்கிருத பண்டிதர், நேர்த்தியாகப் பாடுவார். ஆனால் அவரிடம் காணப்படும் விசேஷமான குணம் அவர் குழந்தைகளிடம் காட்டும் தாய் அன்பேயாகும். அந்த மண்டபத்தில் அழகாகக் கோலம் வரைந்திருந்தார். மண்ணால் செய்த விளக்குகளை வரிசையாக வைத்து தீபம் ஏற்றி இருந்தார். அது களைப்படைந்த கண்களுக்கு குளுமையாக இருந்தது.

அன்றைய வைபவம் பிரார்த்தனையோடு ஆரம்பமாயிற்று. பயிற்சிபெற வந்திருந்தவர்கள் காந்தியடிகளுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றபின் காந்தியடிகள் கையினால் செய்யும் உபயோகமான வேலையின் மூலம் பெறக்கூடிய கல்வி அறிவைப்பற்றி அவர்களுக்குக் கூறலானார்:—

"கையினால் செய்யும் வேலையிலேயே அதிக கவனம் செலுத்தப்படுவதாக ஒருவர் குறை கூறினார். ஆனால் அத்தகைய வேலை மூலம் அதிகமான கல்வியைப் பெற முடியும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. தற்காலத்தில் நடைபெறும் கல்வி முறை ஏகாதிபத்திய ஆட்சியை இந்தியாவில் பலப்படுத்துவதற்காகவும் நிலைத்திருக்கும்படி செய்வதற்காகவுமே ஏற்படுத்தப் பட்டதாகும். அத்தகைய கல்வி பெற்றவர்கள் அதில் பிரியமுடையவர்கள். அதனால் அவர்களுக்குக் கையால் வேலை செய்வதென்பது கஷ்டமாயிருக்கிறது. சர்க்கார் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுப்பவர்கள் யாரும் மாணவர்களுக்கு எப்படித்தெருக்களையோ கக்கூசுகளையோ சுத்தமசெய்வது என்பதைக் கற்றுக்கொடுக்கச் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் இங்கே சுத்தமும் சுகாதாரமும் தான் உங்கள் பயிற்சியின் ஆரம்பமும் முடிவுமாகும். கக்கூசு எடுப்பது என்பது ஒரு வித்தை. அதைக்கற்றுக் கொள்ள நீங்கள் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த விதமான கல்வியைப் பெறுவதற்கும், இடைவிடாமல் கேள்வி கேட்பதும் எதையும் அறிய வேண்டுமென்று விரும்புவதும் முதற்தேவையாகும். ஆயினும் ஆசிரியரிடத்தில் பணிவும் மரியாதையும் அவசியமாயிருக்க வேண்டும். கேள்வி கேட்பதாய்ச் சொல்லிக் கொண்டு அவ மரியாதையாய் நடக்கக் கூடாது.

அப்படி நடந்தால் எந்த அறிவையும் பெறமுடியாது. பணிவும் கற்க வேண்டுமென்ற ஆசையும் இல்லாதவர்களுக்கு அறிவு கைகூடாது.

உபயோகமான கைத்தொழில் தான் அறிவை அபிவிருத்தி செய்வதற்குத் தலை சிறந்த சாதனமாகும். வேறு விதத்திலும் அறிவைக் கூர்மையாக்கலாம். ஆனால் அந்த அறிவு சகல அம்சங்களிலும் வளர்ச்சி பெற்ற அறிவாய் இருக்காது. அந்த அறிவு ஒருவனை எளிதில் போக்கிரியாகவும் துஷ்டனாகவும் செய்துவிட முடியும்.

உடம்பு, மனம், ஆன்மா மூன்றும் வளர்ச்சி அடைந்தால் தான் அறிவு சரியானபடி வளர்ச்சி அடைந்ததாகக் கூறலாம். அதனால் தான் இங்கே கொடுக்கும் பயிற்சி முறையில் கையால் செய்யும் வேலைக்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமூகத்துக்கு உபயோகமான கைத்தொழில் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் அறிவே சேவை செய்வதற்கேற்ற கருவியாகும், அந்த அறிவு தவறான வழியில் செல்லாது. இந்த அஸ்திவாரமான விஷயத்தை நீங்கள் அறிந்து கொண்டால் உங்களை இங்கு அனுப்புவதற்காகச் சர்க்கார் செலவு செய்யும் பணம் நல்ல விதத்தில் செலவு செய்யப்பட்டதாகும்."

அந்த நாள்

செப்டம்பர் 2ம் தேதி பண்டிட் ஜவஹர்லால் நேருவும் அவருடைய சகாக்களும் தலை சிறந்த கடமையாக எண்ணி முள் முடியைத் தரித்துக் கொண்டார்கள். காந்தியடிகளுக்கு அந்த நாள் ஆத்ம சோதனை செய்யும் நாளாக இருந்தது. எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்த பொழுது, அவர் அதிகாலையில் எழுந்திருந்து இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் புதிய மந்திரிகள் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் எழுதிய விஷயத்தை அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் விவரித்துச் சொன்னார் :—

"இன்று இந்துதேச சரித்திரத்தில் மிகவும் விசேஷமான நாள். இந்த தினத்தைக் காண இந்தியா தேசம்எவ்வளவோ காலமாகக் காத்துக்கொண்டிருந்தது. ஆயினும் பூர்ண சுதந்திரம் கிடைத்துவிட்டதாக எண்ணவேண்டாம். இது அந்த ஏணியில் முதல் படி மட்டுமே யாகும்.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக இருந்துவந்த சச்சரவைச் சமாதானமான முறையில் தீர்த்துவைக்க முடிவு செய்திருப்பதற்காகப் பிரிட்டிஷ்சர்க்காருக்கு வந்தனமளிக்கின்றேன். அந்த சர்க்கார் இதற்குமுன் என்ன செய்திருந்தாலும் பழைய தவறுகளை எடுத்துக் கூறிக்கொண் டிருப்பதற்கு இது சமயமன்று.

லண்டனில் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் இந்திய அரசர்களுக்கும் முன்னிலையில் சுயராஜ்யம் வந்ததும் வைசிராயினுடைய மாளிகையை ஏழைகளுக்கான ஆஸ்பத்திரியாக மாற்றிவிடுவேன் என்று நான் சொன்னதை ஒரு நண்பர் எனக்கு ஞாபகப்படுத்துகிறார். நான் அந்த வாக்குறுதியை மறந்துவிடவில்லை. இப்பொழுதும் நான் அந்த எண்ணத்துடன் தான் இருக்கிறேன். ஆனால் அதற்குரிய காலம் மட்டும் இன்னும் வந்து சேரவில்லை. வைஸ்ராய் இன்னும் பதவியிலிருந்து கொண்டிருப்பதால் அவரை மாளிகையைக் காலிசெய்யும்படி இன்று கேட்கமுடியாது. அதிகார முழுவதும் இன்னும் நம் கைக்கு வந்து சேரவில்லை. வைஸ்ராயும் இருக்கிறார். சேனையும் இருக்கிறது. நம்முடைய முடிசூடா மன்னரும் முதல் பிரதம மந்திரியுமான பண்டிட் நேருவும் அவருடைய சகாக்களும் கடமைகளைச் சரியாகவும் பரிபூரணமாகவும் நிறைவேற்றுவார்களானால் அதிகார முழுவதும் காலதாமதமின்றிச் சீக்கிரத்திலேயே நம்முடைய கைக்கு வந்து சேர்ந்து விடும். அப்பொழுது வைஸ்ராய் தாமாகவே தம்முடைய மாளிகையைக் காலிசெய்து விடுவார். அப்பொழுது பரம ஏழைகளான ஹரிஜனங்கள் உள்பட சகல ஏழைகளுக்கும் உபயோகமான ஆஸ்பத்திரியாக அதைச் செய்து விடலாம்.

சந்தோஷப் பட வேண்டிய சமயமன்று.

காந்தியடிகள் மேலும் கூறியதாவது:—

"இன்று சந்தோஷக் கொண்டாட்டங்கள் நடத்த வேண்டிய நாளன்று. முஸ்லீம் லீக் முஸ்லீம்களுடைய பலம் பொருந்திய ஸ்தாபனம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய முஸ்லீம் லீக் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளாததால்தான் நமது மந்திரிகள் இந்தப் பதவிகளை ஏற்றுக் கொள்ள மிகுந்த தயக்கத்துடனேயே சம்மதித்தார்கள். முஸ்லீம் லீக் இடைக்கால சர்க்காரில் சேர மறுத்து விட்டது. முஸ்லிம்கள் நம்முடைய சகோதரர்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் இந்தியாவின் புத்திரர்கள். நம்மைப் பெற்றிருக்கும் தாய் இறந்து போகக் கூடியவள். ஆயினும் நம்முடைய பக்திக்கும் வணக்கத்துக்கும் உரிமையுடையவள். அத்தகைய வணக்கம் ஆன்மாவைச் சுத்தப்படுத்தும். அந்த வணக்கத்தின் தன்மை அப்படியானால் நாம் எவ்லோரும் யாருடைய மடியில் பிறந்து யாருடைய மடியில் இறக்கிறோமோ அந்த இறவாத தாயாகிய நம்முடைய தாய் நாட்டிற்குச் செலுத்த வேண்டிய பக்தியும் வணக்கமும் எவ்வளவு உயர்ந்ததாகும்? இந்த தேசத்தில் பிறந்து இதைத் தம்முடைய தாய் நாடாக பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் ஹிந்துவாயினும், முஸ்லிமாயினும், பார்ஸியாயினும், கிறிஸ்துவராயினும், ஜைனராயினும், சீக்கியராயினும் எல்லோரும் அவளுடைய குழந்தைகள். அதனால் ரத்தபந்தத்தைவிட அதிக பலமுள்ள பந்தத்தையுடைய சகோதரர்கள் ஆவார்கள்.

இன்று முஸல்மான்கள், ஹிந்துக்களைக் கண்கொண்டு பார்க்க மறுக்கிறார்கள். சரியோ தப்போ ஹிந்துக்கள் தங்களை ஏமாற்றி விட்டதாக எண்ணிக் கொண்டு முஸல்மான்கள் இன்றையதினத்தைத் துக்கதினமாகக் கொண்டாடுகிறார்கள். அதைக் கொண்டு அவர்கள் நம்முடைய சகோதரர்கள் இல்லை என்று ஆகிவிடமாட்டார்கள். சகோதரர் கோபித்தால் திரும்பக் கோபிக்கக்கூடாது. ஆதலால் நாம் முஸல்மான்களுடைய துக்கக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள முடியாத போதிலும் இந்துக்களாகிய நாம் விருந்து வாணவேடிக்கை முதலிய கொண்டாட்டங்கள்நடத்தாமல் அவர்களுடைய மனத்தை வருத்தப்படாத விதத்தில் நடந்து கொள்ள வேண்டிய நாள் இது. அதனால் சந்தோஷக் கொண்டாட்டங்கள் அதற்குக் கொஞ்சமும் பொருந்தா. இத்தகைய தினங்களை விருந்து நாளாக எண்ணமல் உபவாச நாளாகவே எண்ண வேண்டுமென்று இஸ்லாம், கிருஸ்துவ மதம், ஹிந்து மதம் எல்லாம் ஒரே மாதிரியாகக் கூறுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நம்முடைய மனத்தைப் பரிசோதித்துக் கொள்வதற்காகவும் நம்முடைய முஸ்லீம் சகோதரர்களுக்கு உண்மையிலேயே ஏதேனும் அநியாயம் செய்திருக்கிறோமா என்று கண்டு பிடிப்பதற்காகவும் உபயோகித்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் அநியாயம் செய்திருப்பதாகக் கண்டால் உடனே அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். அதே சமயத்தில் நான் முஸ்லீம் லீக்கிடம் மரியாதையுடன் சொல்லிக் கொள்வது யாதெனில் பிரிட்டிஷாரையும் ஹிந்துக்களையும் பகைவர்களாகக் கருதுவதும்

நேரிடையான நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பயமுறுத்துவதும் சரியுமில்லை, தர்க்கரீதிக்குப் பொருந்தவும் செய்யாது என்பதாகும். முஸ்லிம் லீக் ஏககாலத்தில் இரண்டு குதிரைகளின் மீது சவாரி செய்ய முடியாது. பிரிட்டிஷாரோடு ஒத்துழைப்ப தில்லை என்று கூறினால் தேச மக்களோடு ஒத்துழைப்பது என்றே அர்த்தமாகும். அவர்கள் ஏன் ஒத்துழையாமையை மேற்கொள்ள வேண்டும்? காங்கிரஸ் ஒரு நாளும் முஸ்லீம்களுக்கு விரோதமாக பிரிட்டனோடுசேர்ந்துகொள்ள முடியாது. இன்று அது இடைக்கால சர்க்காரை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருடைய நன்மையைத் தேடுவதற்காக அன்று. முஸ்லிம்லீக் உள்பட சகல மக்களுக்கும் சுதந்திரத்தைத் தேடிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் ஏற்றுகொண்டிருக்கிறது. எந்த மந்திரியாவது பிறருக்கு கேடு உண்டாக்கி ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு நன்மை தேட விரும்பினாலும் எந்தக் குறிப்பிட்ட வகுப்பார்க்கேனும் தீமைசெய்ய விரும்பினாலும் அவர் மந்திரியாயிருக்கத் தகுதியற்றவராவார். முஸல்மான்கள் ஹிந்துக்களைத் தங்கள் பகைவர்களாகக் கருதுவதும் இந்த தேசத்திலேயே பிறந்து இந்த தேசத்திலேயே வளர்ந்து இந்த தேசத்திலேயே மடிந்து போகும் சகோதரர்களாகப் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்ததை மறந்துவிட முயல்வதும் தவறு. முஸ்லிம் லீக்கின் கொள்கை இஸ்லாம் மதத்திற்கு முரண்பட்டது என்றுகூடச் சொல்வேன். ஏதேனும் சச்சரவு ஏற்பட்டால் முதலில் பரஸ்பரம் விவாதித்துத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அது முடியாவிட்டால் மத்தியஸ்தத்துக்கு விட்டு அதன் தீர்ப்புப்படி நடந்து கொள்ளவேண்டும். அதுதான் நியாயமான முறை.

**பழைய வாக்குறுதிப்படி நடக்கவேண்டும்**

அதன்பிறகு காந்தியடிகள் கூறியதாவது :—

மந்திரிகளுடைய முதற் கடமை யாது? உப்பு சத்தியாக்கிரகத்தை ஞாபகப் படுத்திக்கொண்டு உப்பு வரியை ரத்துசெய்து விடுவதுதான் அவர்களுடைய முதல் வேலை. அதற்காகத்தான் நமது தேசம் 1930-ம் வருஷத்தில் அரியதோர் போர் நடத்தியது. தண்டியாத்திரைதான் தேசத்திற்குப் புத்துயிர் ஊட்டியது. பெண்களையும் கூட சேவை செய்யும்படி செய்தது. ஏழை மக்களுக்குச் சுதந்திரம் தேடுவதென்ற காங்கிரஸ் உறுதிமொழிக்கு அறிகுறியாயிருந்தது.

உப்பு சத்தியாக்கிரக காலத்தில் இந்தியப் பெண்கள் செய்த சேவைகளைக் கண்டு உலக முழுதும் ஆச்சரியப்பட்டது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைத்து ஏழைகளுக்குக் காற்றும் ஜலமும் சும்மா கிடைப்பது போல உப்பும் கிடைக்கும்படி செய்வதற்குரிய காலம் இதுதான். ஏழைகளுக்கு இதன் மூலம் வரி குறைவது ஒரு பெரிய காரியமன்று. வரியில்லாமல் உப்புக் கிடைப்பதுதான் பெரிய காரியம். உப்பு வரியை ரத்து செய்தால் அது சுயராஜ்யச் செய்தியை சாதிமத வித்தியாச மில்லாமல் சகல ஏழை மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்க்கும். இதுபோலவே சகல சர்க்கார் அடக்குமுறைகளும் சீக்கிரத்தில் ஒழிந்துபோகு மென்று அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

மந்திரிகள் செய்ய வேண்டிய இரண்டாவது வேலை வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும். சர்க்கார் அறிக்கை மூலமாக இதைச் செய்துவிட முடியாது. மந்திரிகள் அதற்காக வாழவும் அதற்காக மடியவும் தயாரா யிருக்க வேண்டும். நான் மந்திரியா யிருந்தால் உள்நாட்டில் அமைதியைப் பாதுகாப்பதற்காக ராணுவத்தை உபயோகிப்பதில்லை என்று பகிரங்கமாகச் சொல்லி விடுவேன். அந்தக் காரியத்திற்காகப் போலீஸைக் கூட உபயோகிக்க மாட்டேன். இரண்டு வகுப்பாரும் சண்டை யிட்டுக்கொள்வதைத் தடுப்பதற்கு வேறு வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். சண்டை பிடித்துத்தான் தீரவேண்டுமென்று ஏற்பட்டால் பிறர் உதவியின்றி சண்டை போட்டுத் தீர்க்கத் தைரியமுடையவர்களாயிருக்க வேண்டும். பாதுகாப்பிற்காக பிரிட்டிஷ் படையின் உதவியை நாடும் வரை நம்முடைய அடிமைத்தனம் இருந்து கொண்டுதான் இருக்கும் என்று துணிந்து கூறுவேன்.

அடுத்ததாகக் செய்ய வேண்டிய வேலை தீண்டாமையை அறவே ஒழித்து விடுவதாகும். 1920-ம் வருஷத்திலேயே காங்கிரஸ் மகா சபை தீண்டாமையை ஹிந்து மதத்திற்கு ஏற்பட்ட கறையாகக் கூறியிருக்கிறது. அதை வேரோடு களைந்து விட நாம் அன்று உறுதி செய்தோம். பெரிய நகரங்களிலெல்லாம் தோட்டிகள் குடியிருக்கும் சேரிகளின் நிலைமை தலையைத் தொங்கப் போட வேண்டியதாயிருக்கிறது. இதற்குமுன் அவைகளைச் சீர்திருத்துவதற்கு நான் வைஸ்ராய்க்கு வேண்டுகோள் செய்து கொள்வது வழக்கம். ஆனால் இப்பொழுது அது இடைக்கால சர்க்காரின் பொறுப்பாகும். அவர்கள் தான் அதை மாற்ற வேண்டும்.

கடைசியாக உள்ள உறுதி மொழி கதரைப் பற்றினதாகும். ஏழை கிராம வாசிகளுக்கு உடை தருவதாக உறுதி கூறினோம். 1920-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை சகல இந்திய மக்களும் கையால் நூற்று கையால் நெய்த துணிகளையே அணிய வேண்டுமென்று தீர்மானித்தது. அந்தத் தீர்மானம் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. நிறைவேற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக ஜனங்கள் கதர் வாங்குவதற்கு வேண்டிய நூலை உற்பத்தி செய்ய முடியவில்லை என்று முணுமுணுக்கிறார்கள். ஜனங்கள் நூற்காவிட்டால் எங்கிருந்து கதர் வந்து சேரும்? கூலியானது அளவுக்குமிஞ்சி ஏறி இருப்பதால் கூலி கொடுத்து நூல் நூற்கச் செய்ய முடியவில்லை. அதனால் நாமே நமக்கு நூற்றுக்கொள்ள வேண்டும். வேறு வழிகிடையாது. இடைக்கால சர்க்காரிலுள்ள மந்திரிகள் கதர் உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். தங்கள் வீடுகளிலும் தங்கள் கச்சேரிகளிலும் கதரைத்தவிர வேறு எதையும் உபயோகியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கதர் வாங்குவதற்கு வேண்டிய நூலைத் தருவதாக நான் விளையாட்டாகக் கூறினேன். அகில இந்திய சர்க்கா சங்கத்தின் விதிகள் கதர் வாங்குவதற்கு, கூலிக்காக நூற்ற நூல் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறதே யன்றி நண்பர்கள் நூற்ற நூலைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. எனக்கு நூலை ஜனங்கள் இனமாகக் கொடுக்கிறார்கள். நான் மந்திரிகளுடைய நண்பன். அவர்கள் கதர் வாங்குவதற்கு வேண்டிய நூலை நான் அவர்களுக்குக் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். கதர் கடைகளில் கதர் அதிகமாய் இல்லை என்பது உண்மைதான். ஆயினும் அவர்களுக்கு வேண்டிய கதர் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். தற்சமயம் முரட்டுக்கதர்தான் கிடைக்கும். அதைக் கொண்டு அவர்கள் திருப்தி அடைந்துகொள்ள வேண்டும். மெல்லிய ஆந்திராக் கதர் கொடுப்பதாக நான் உறுதிகூற முடியாது. அந்த கதர் வேண்டுமானால் அவர்கள் இந்தியா பரிபூர்ண சுதந்திரம் அடையும்வரைக் காத்திருக்க வேண்டும்.

இடைக்கால சர்க்கார் உண்மையாகவும் சுத்தமாகவும் இருந்து உண்மையான சுயராஜ்யத்தை அடையும் வழியைக் காட்டுவார்களென்று நம்புகிறேன். அது விஷயத்தில் இந்திய மக்கள் எல்லோரும் அவர்களுடன் பரிபூர்ணமாக ஒத்துழைப்பார்களென்றும் நம்புகிறேன்.

புது டில்லி, — 3-9-46 — பியாரேலால்.

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை,
பிரசுரித்தவர் : சின்ன அண்ணமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை